**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
## *பாடம் 4*

## ரகசிய வருகை – Rapture Promise

நமது வேதாகமத்தில் திரித்துவம் போன்ற வார்த்தை இல்லாதது போல் இந்த வார்த்தையைக் காண இயலாது. ஆனால் நமது லத்தீன் வேதாகமத்தில் இந்த வார்த்தையை 1 தெசலோனிக்கேயர் 4:16 யில் காணலாம் ப்ரௌஸியா (*'Parousia'*) என்ற கிரேக்க வார்த்தை ரகசியவருகையையும் அப்பக்காலிப்ஸ் 'Apokalupsis') என்ற வார்த்தை சோதனைக்காலத்தையும் குறிக்கின்றது.

கிரேக்க வார்த்தையான ஹார்ப்பஸ்வ்க்கு சமமான லத்தீன் வினைச்சொல் ரப்பியோ ஆகும். அதன் அர்த்தம் பலவந்தமாக எடுக்கப்படும் என்பது ஆகும். பழமையான லத்தீன் வேதாகமத்தில் ரப்பியோ என்ற சொல்லின் தகுந்த காலம் 17 வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ராப்ட்ஸ் என்பது ரப்பியோ என்பதின் எச்சவினை ஆகும். ஆங்கில வார்த்தையான ராப்ட் மற்றும் ராப்சர் எச்சவினையில் இருந்து எடுக்கப்பட்ட அடிச்சொற்கள்.

*ப்ரௌஸியா மற்றும் அப்பூக்களுப்சிஸ்.* **Parousia and Apokalupsis**

The Latin equivalent of the Greek *Harpazo* is the Latin verb *rapio*, "to take away by force." In the Latin Vulgate, one of the oldest Bibles in existence, the appropriate tense of *rapio* appears in verse 17. (*Raptus* is the past participle of *rapio*, and our English words "rapt" and "rapture" stem from this past participle.)

*ரகசியவருகையை விசுவாசிக்கிறவர்கள் ப்ரௌஸியா என்ற கிரேக்க வார்த்தை கிறிஸ்து வருகையும் மற்றும் அவரோடுகூட சபைகள் எடுத்து கொள்ளப்படுவதையும் குறிக்கிறது என்கிறார்கள் .அது போல அப்பூக்களுப்சிஸ் என்ற கிரேக்க வார்த்தை ஏழு வருட உபத்திரவ காலத்திற்குப்பிறகு காணக்கூடிய மகிமை நிறைந்த கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கிறது.*

*கிறிஸ்து ஏழு வருஷம் உபத்திரவத்தில் பிரிக்கப்பட்ட இரண்டு கட்டங்களில் திரும்பி வருவார் என்று இந்த இரண்டு வார்த்தையை கொண்டு அவர்கள் விசுவாசிக்கிறார்கள். எனவே இந்த இரண்டு வார்த்தைகளும் இரண்டாம் வருகையை குறிக்கின்றன தவிர இரண்டு விதமான வருகையை அல்ல.*

*1* ***தெசலோனிக்கேயர்*** *4:13-18, அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. 14. இயேசுவானவர் மரித்து பின்பு*

*எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்த வர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். 15.* **கர்த்தருடைய** *வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது:* **கர்த்தருடைய** *வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்த வர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. 16. ஏனெனில்,* **கர்த்தர்** *தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 17. பின்பு உயிரோடிருக்கும் நாமும்* **கர்த்தருக்கு** *எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும்* **கர்த்தருடனேகூட** *இருப்போம். 18. ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரை யொருவர் தேற்றுங்கள்.*

*கிரேக்க வார்த்தையான ஹார்ப்பஸ்வ் என்பதின் ஆங்கில மொழிபெயப்பு* caught up *ஆகும்.* caught *அப் என்றால் கட்டாயத்தின் பெயரில் எடுக்கப்பட்டது என்று அர்த்தமாகும்.*

*ரகசியவருகையின்போது வாழுந்துகொண்டிருக்கும் விசுவாசிகள் காற்றில் எடுத்துக்கொள்ளப்பட்டு மேகத்துக்குள்ளாக போய் ஒரு நொடியில் தேவனோடு இணைவார்கள் .*

*எனவே ஒரேயொரு நம்பிக்கையின் ஆழைப்பு நமக்கு இருக்கிறது.*

# 1. The Promise

*1 **தெசலோனிக்கேயர்** 1:10, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.*

***தீத்து** 2:13, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது*

## நம்பிக்கை,Hope!

*நம்பிக்கை என்றல் என்ன?*

*ஒரு கிறிஸ்தவனாய் எதன் மேல் நமிக்கை வைத்திருக்கின்றாய்?*
*ஒரு கிறிஸ்தவனின் நம்பிக்கை என்றல் என்ன?*

- *ஆண்டவரோடு பரலோகத்தில் இருப்பேன்?*
- *அல்லது இரட்சிப்பை குறித்து?*
- *அல்லது நித்யவாழ்வை குறித்து?*
- *அல்லது ஆண்டவருக்காய் உண்மையாய் இந்த பூமியில் ஓடுவது?*
- *அல்லது ஒரு நாள் என்னுடைய வேதனை எல்லாம் ஒழிந்துபோகும்?*
- *அல்லது ஒரு நாள் நான் மரித்துப்போவேன்?*
- *அல்லது இந்த துயரமான வாழவைவிட்டு இயேசுவோடு இருப்பேன்?*

**நம்பிக்கை என்பது என்ன இல்லை என்று பார்ப்போம்!**

***ரோமர் 8:24-25,*** *அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? 25. நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.*

*ஆகையால் நாம் காண்கிறதை குறித்து நம்பிக்கை தேவையில்லை நாம் காணாததை குறித்து தான் நமக்கு நம்பிக்கை தேவை!*

*பவுல் கொரிந்து சபைக்கு நம்பிக்கையை குறித்து கடிதம் எழுதுகிறார்.*

*1* **கொரிந்தியர்** *13:13, இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.*

*And now abide faith, hope, love, these three; but the greatest of these is love.*

*தேவன் மூன்று காரியங்கள் ஒரு கிறிஸ்தவனுக்கு முக்கியமான அத்தியாவசியமான ஒன்று என்று குறிப்பிடுவதில் நம்பிக்கையும் ஒன்று.*

*ஆனால் நமக்கு நம்பிக்கை குறித்து ஒரு தெளிவு இல்லை.*

*அனேகருக்கு ரட்சிப்பு நம்பிக்கை என்று நினைக்கிறார்கள். நான் ரட்சிக்கப்பட்டு ஒரு நாள் நித்ய வாழ்வு அடைவேன் என்று நம்பிக்கை வைக்கின்றார்கள்.*

***யோவான் 5:24,*** *என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

***யோவான் 17:3,*** *ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.*

*ஆனால் இந்த வசனத்தில் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து அவருடைய வசனத்தை ஏற்றுகொள்ளும்போது உங்களுக்கு நித்ய வாழ்வு கிடைத்துவிட்டது என்று சொல்லுகிறார்.*

*இது நம்பிக்கை அல்ல... இது எதிர்காலத்தில் நடைபெறும் என்று சொல்லவில்லை ... இது இப்போதே நமக்கு கிடைத்துவிட்டது.*

***1 யோவான் 3:2,*** *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.*

நாம் தேவனுடைய பிள்ளைகள் ... எப்போது?

இப்போது.

நமக்கு இயேசு சிலுவையில் மரித்தபோது நமக்கு ரட்சிப்பு உண்டானது. இது நடந்து முடிந்துவிட்டது. நாம் இப்போது அவருடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம்.

இந்த நம்பிக்கை செத்தது அல்ல ஜீவனுள்ளது.

*1* **பேதுரு** *1:3-5,* நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; 4. அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். 5. கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு நம்பிக்கையை குறித்து இரண்டு சொல்லுகிறார்.

- உயிருள்ளது

- *பரலோகத்தில் நமக்காக முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது*

*அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் தேவன் இந்த நம்பிக்கை நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லுகின்றார்.*

**கொலோசெயர்** *1:4, பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்,*

*ஆக இந்த நம்பிக்கை என்பது*

- *உயிருள்ளது*
- *பரலோகத்தில் நமக்காக முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது*
- *பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது*

*இந்த நம்பிக்கை என்ன?*

*அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுசபைக்கு ஜெபிக்கின்றார்*

**எபேசியர்** *1:18-19, தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; 19. தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய*

நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை என்ன என்று ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்தவராக!

**ரோமர் 5:1-2,** இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். 2. அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.

நாம் இதுவரை பார்த்த நம்பிக்கை என்ன என்று பார்ப்போம்

- உயிருள்ளது
- பரலோகத்தில் நமக்காக முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது
- பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது

- மனமகிழ்ச்சியாய் இருக்கும்

**எபேசியர்** *4:4,* உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு;

ஆக நம்பிக்கை என்பது

- உயிருள்ளது
- பரலோகத்தில் முன்குறிக்கப்பட்டுஉள்ளது
- பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது
- மனமகிழ்ச்சியானது
- நமது அழைப்பின் நம்பிக்கையாயிருக்கிறது

இது ஒரு நல்ல நம்பிக்கை. இந்த நல்ல நம்பிக்கை கிருபையினால் கொடுக்கப்பட்டது .

*2* **தெசலோனிக்கேயர்** *2:16,* நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்,

- உயிருள்ளது
- பரலோகத்தில் முன்குறிக்கப்பட்டுஉள்ளது
- பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது
- மனமகிழ்ச்சியானது

- நமது அழைப்பின் நம்பிக்கையாயிருக்கிறது
- நல்ல நம்பிக்கை .
- கிருபையினால் கொடுக்கப்பட்டது .

இந்த நம்பிக்கையை நம்மால் சம்பாதிக்க இயலாது. அதற்கு நாம் தகுதியானவர்களும் அல்ல .

நம்பிக்கை என்னவென்று பார்க்கலாம் ?

**எபிரெயர்** *6:18-20,* நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார். *19.* அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. *20.* நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

வசனம் 18 ல். தேவன் நமது நம்பிக்கைக்கு உத்திரவாதம் அளிக்கிறார். அவருடைய வாக்குறுதியும் அவருடைய உறுதிமொழியும். நமது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

வசனம் 19 ல் நம்பிக்கை நமக்கு நங்கூரமாக விளங்குகிறது. அது மட்டும் அல்லாமல் திரை சீலைக்கி உள்ளே மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில், தேவன் வாழுகிற இடத்தில் அது வசிக்கிறது.

என் அன்பான சகோதர சகோதரிகளே,

- எங்கள் நம்பிக்கை இரட்சிப்பு அல்ல.
- அது மரணமும் அல்ல.
- அது பரலோகமும் அல்ல.

அது எது?

அது இயேசு:

- இயேசு உயிருள்ளவராய் இருக்கிறார்
- இயேசு பரலோகத்தில் முன்குறிக்கப்பட்டு இருக்கிறார்
- இயேசு பரலோகத்தில் வைக்கப்பட்டு இருக்கிறார்
- இயேசு மகிழ்ச்சியுள்ளவராய் இருக்கின்றார்.
- இயேசு நமது அழைப்புக்கு ஒரு நம்பிக்கை
- இயேசுவே நல்ல நம்பிக்கை
- இயேசு கிருபையால் அளிக்கப்படுகிறார்

இயேசு நமது நம்பிக்கை. அவர் உயிரோடு இருக்கிறார். நமது மகிழ்ச்சியின் காரணமாய் இருக்கிறார். கிருபையால் நம்மிடத்தில் வருகிறார். பரலோகத்தில் நமக்காக முன்குறிக்கப்பட்டு இருக்கிறார். எதிர் காலத்தில் அவரை நாம் பார்க்கப்போகிறோம். தற்போது அவர் மறைமுகமாய் இருக்கிறார. அவர் தாம் நம் நம்பிக்கை

***தீத்து* 2:11-13,** *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, 12. நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, 13. நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.*

***1 தீமோத்தேயு* 1:1,** *நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற* ***கர்த்தராகிய*** *இயேசுகிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்,*

இயேசுவே நமது நம்பிக்கை என்பதற்கு இதை விட என்ன ஒரு தெளிவான விளக்கம் கொடுக்க முடியும்.

இயேசுவே நம்முடைய நம்பிக்கையாக மாறும் போது, ஆசீர்வாதமான நம்பிக்கையால் வேதாகமத்திலிருந்து நாம் பெறும் இன்னொரு பரிமாணம் இருக்கிறது.

*1 **யோவான்** 3:2,* பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

இயேசு தம்மை வெளிப்படுத்தும்போது நீங்களும் நானும் அவர் போல் ஆகிவிடுவோம். எத்தனை மகிமை ... இந்த வாக்குறுதி உங்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கும் என்று நான் நம்புகிறேன் .

இயேசு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும் போது நாம் அவரை போல் ஆகுவதே ஒவொவொரு கிறிஸ்தவனின் நம்பிக்கை ஆகும்

எனவே,தெசலோனிக்கா சபைக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்ததுக்கு திரும்புவோம்

*1* **தெசலோனிக்கேயர்** *1:10, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.*

இந்த சபை பரலோகத்தில் இருந்து வருகிற கிறிஸ்துவுக்காக காத்து இருக்கிறது. அதைப் போல் சபையாகிய நாமும் தேவகுமாரனுக்காக காத்துஇருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அவரை போல மாற முடியும்.

வாக்குத்தத்தத்தின் தலைப்பின்கீழ் நாம் இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தை குறித்து பார்ப்போம்.

யோவான் 14 ல் தேவன் தம்முடைய வாக்குத்தத்தை உறுதி செய்துள்ளார்.

**யோவான்** *14:1-3, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில்*

*விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். 2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

*இந்த சிலிர்க்கவைக்கும் வாக்குறுதி விசுவாசிகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது அல்ல.*

தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் பின்னணியை முதலாவது நாம் பார்ப்போம்.

***யோவான் 13:1,*** *பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.*

இந்தப் பகுதி இயேசு தாம் பிதாவிடத்தில் போகப் போகிறார் என்பதையும் அதற்கான நேரம் வந்துவிட்டது என்பதையும் அறிந்திருந்தார் என்பதை நமக்கு தெரிவிக்கிறது. ஆனாலும் இயேசு சீசர்கள் மேல் மிகுத்த அன்பு வைத்தபடியால் அவர்கள் மேல் அக்கறையாய் இருந்தார்.

சீசர்களின் பாதத்தை கழுவி தம் அன்பையும் பாசத்தையும் இயேசு வெளிக்காட்டினார். அதற்கு அப்புறம் புதிய உடன்படிக்கையை அவர்களோடு கூட பகிர்ந்துகொண்டார். பந்தி பரிமாறுவதற்கு முன்பாக அவர் தம்முடைய இறப்பை குறித்து சொல்லத் தொடங்கினர் .

**யோவான்** *13:21,* இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சாட்சியாகச் சொன்னார்.

இயேசு தமது அன்பை வெளிக்காட்டின பின்பு உங்களில் ஒருவன் என்னை காட்டிக்கொடுக்கப் போகிறான் என்று சொன்னார். புனித பந்தி பரிமாறப்பட்டப் பிறகு யூதாஸ் அவர் கட்டிக்கொடுப்பதற்காக அவ்விடம் விட்டு புறப்பட்டுப் போனான்.

***யோவான் 13:31,*** *அவன் புறப்பட்டுப்போனபின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்.*

*இயேசு நான் மகிமைப்பட போகின்ற நேரம் இது என்று கூறினார். தமது* 33 *ம் வயதில் நம்முடைய பாவத்துக்காக மரித்தார் அவர் நித்தியத்துக்கும் இதற்க்காக காத்திருந்தார்.*

*இதில் உள்ள முரண்பாட்டை கவனிங்கள். சிலுவை மரணம் நடைபெற இருப்பதை இயேசு தம் சொந்த மகிமையாகக் கண்டார். என்ன ஒரு அற்புதம்*

V 32, ***தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.***

*இயேசு சிலுவையின் மகிமை மட்டுமல்ல, உயிர்த்தெழுதலின் மகிமையும், பரலோகத்தின் மகிமையும், அவருடைய தந்தையின் வலதுபுறத்திதில் வீற்றுக்கும் இருக்கும் மகிமையும் கண்டார்.*

*அனைத்து போராட்டங்களும் முடிந்து விட்டன என்று இயேசு சொன்னார், காத்திருப்பு முடிந்துவிட்டது, இப்போது நான்*

மகிமைப்படுகிறேன், அவர் தனது சீடர்களை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கடந்த மூன்று வருடங்களாக அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர் அவர்களை மிகவும் நேசித்தார். 33 ஆம் வசனத்தில் அவர் அவர்களிடம் அதே அன்பைக் காட்டினார்.

V33, பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.

என்ன ஒரு மென்மையான அன்பு .... அவர் அவர்களை சிறிய குழந்தைகள் என அழைத்தார்.

யூதர்களுக்கு அவர் என்ன சொன்னார் என்பதை கடந்த வாரம் ஞாயிறு செய்தியில் பார்த்தோம்.

**யோவான் 8:21,** இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்

வித்தியாசத்தை கவனிகள், நான் போகிறேன் நான் போகும் இடத்திற்கு நீங்கள் வர முடியாது என்று சீஷர்களிடம் சொன்னவர் யூதர்களிடம் உரையாடும்போது நீங்கள் உங்கள் பாவத்தில் மரிக்கப்போகிறீர்கள் என்று சொன்னார் .

மரணம் வரை உம்மை பின்தொடர்வோம் என்று சொன்ன பேதுருக்கு 36 ஆம் வசனத்தின் மூலம் பதில் அளித்தார்.

V36, சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்.

என்ன பெரிய இரட்சகர் நமக்கு இருக்கிறார் .......அல்லேலூயா.

சீஷர்கள் குழப்பம் அடைந்தார்கள் .... அவர்களில் ஒருவன் இயேசுவை காட்டிக்கொடுப்பான் என்பதை அறிந்து இருந்தார்கள்.

அவரை பின்தொடர எல்லாவற்றையும் விட்டுவந்தார்கள். அவர்கள் குடும்பம், வியாபாரம், வேலை அனால் இப்போது இயேசு

சொல்லுகிறார் நான் மரணத்துக்கு உள்ளாகப்போகிறேன் நீங்கள் என்னை பின்தொடர்ந்து வர இயலாது என்று. அந்த காட்சியை ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள், அந்த நேரத்தில் அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்று.

இப்போது இந்த மகத்துவமான வாக்குத்தத்தை இயேசு அவர்களுக்கு சொல்லுகிறார்.

**யோவான்** *14:1-3,* *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். 2. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

அற்புதம் .......

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.....என்னை பொருத்தமட்டும் கண்டிப்பாக அவர்கள் திகிலடைத்துஇருப்பார்கள் .

பிதாவை நீ விசுவாசிக்கிறாய் அதை போல் என்னையும் நீ விசுவாசி என்கிறார். அவர் அவர்களிடம் சொல்கிறார் நான் உங்களுக்காக ஒரு இடத்தை தயார் செய்யப் போகிறேன்.

பல வீடுகள் அல்ல ஒரே ஒரு அரண்மனை மட்டுமே உள்ளது, ஏனெனில் இந்த மொழிபெயர்ப்பின் காரணமாக பல தவறான கோட்பாடுகள் வெளிப்படுகின்றன.

**வெளி 21:16**, *அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது*

நகரம் நான்கு பக்கங்களிலும் 1500மைல்கல் உள்ளது. ஆக மொத்தம் அதன் பரப்பளவு 2,250,000 சதுர மைல்கள். அது எல்லா மக்களுக்கும் இடமளிக்க போதுமானதாக இருக்குமா?

நாம் வாழும் லண்டன் 605 சதுர மைல்கள் கொண்டது, இதில் 2.2 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். 100 பில்லியன் மக்களை தங்கவைக்க போதுமானதாக உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பரலோகத்துக்கு போகும் பாதை குறுகளானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவை மறுதலித்தவர்களுக்கு அங்கே இடம் இல்லை.

இயேசு வேறு யாரையும் அனுப்பவில்லை, தேவதூதர்கள் அல்லது வேறு எந்த தூதரும் அல்ல. அவரே வருகிறார், அவருடன் நம்மை அழைத்துச் செல்லப் போகிறார். நான் உங்களை என்னிடம் அழைத்துச் செல்கிறேன் என்கிறார். நினைவில் வைத்து கொள்ளுங்கள் இரண்டம் வருகையின் போது பரலோகத்தில் இருந்து எல்லாரும் இறங்கி வருவார்கள் ஆனால் பேரானந்தத்தில், நாம் அவருடன் இருக்கும்படி பரலோகத்திற்கு செல்வோம்.

சீஷர்கள் பரலோக ராஜ்ஜியத்தை பற்றி யோசிக்கவில்லை, அவர்கள் அறிந்தது எல்லாம் மேசியா வந்து தங்கள் எதிரிகளிடமிருந்து விடுவித்து பூமியில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவார் என்பதே.

ஆதலால் நான் போகிறான் என்று இயேசு சொன்னபோது அவர்கள் அவர் எதைப் பற்றி சொல்லுகிறார் என்று அறியாதிருந்தார்கள்.

அதனால்தான், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றும் நீங்கள் எங்கு செல்கிறீர்கள் என்றும், எங்களுக்குத் தெரியவில்லை என்று தோமா கேட்டான்.

**யோவான் 14:6**, அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

யோவான் 14 ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவே இஸ்ரவேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்டதைவிட முற்றிலும் வேறுபட்ட நம்பிக்கையை அறிவிக்கிறார்.

இஸ்ரவேலின் வாக்குறுதி பூமியிலுள்ள ராஜ்யம்.

சபைகளின் வாக்குறுதி பூமிலிருந்து எடுத்து பிதாவின் வீட்டில் சேர்ப்பது பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலருக்கு இப்படி எந்த வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை.

*அவர்கள் ஆயிரம் வருட அரசாட்சியில் பூமியில் இருக்க போகிறார்கள்.*

*ஆதலால் இஸ்ரவேலின் வாக்குறுதியும் சபைகளின் வாக்குறுதியும்இரண்டும் வெவ்வேறு விஷயங்கள்.*

*அதினால்தான், அப்போஸ்தலனாகிய பவுல், பிலிப்புவிலுள்ள தேவாலயத்திற்கு எழுதியபோது, அவர் பூமியை விட்டு பிரிந்த அடுத்த கணம் பிதாவினிடத்தில் இருப்பேன் என்று கூறினார்.*

***பிலிப்பியர் 1:23**, ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன், தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்.*

***1கொரிந்தியர் 5:8**, ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.*

*ஒரு விசுவாசி இறந்துவிட்டால், அவருடைய ஆவி கடவுளின் முன்னிலையில் இயேசு கிறிஸ்துவின்*

பிரசன்னதில் நுழைகிறது. அவர்களின் உடல் கடவுளின் முன்னிலையில் செல்லாது, மாறாக அது கல்லறைக்கு செல்கிறது. ரகசிய வருகை வரும் மட்டும் விசுவாசிகளின் ஆவி மகிமையின் சரீரம் இல்லாமல் பரதேசில் உள்ளது.

நாம் பேரானந்தத்திற்காக காத்திருக்கிறோம், ஏனென்றால் அப்பொழுதுதான் ஆவியானது மகிமைப்படுத்தப்பட்ட உடல்களோடு சேர்ந்து, கல்லறையில் இருந்து வெளியே வரப்போகிறது.

இது நடைபெறும் காலத்தை குறித்து யோவான் 14ல் சொல்லவில்லை. எந்த அறிகுறியும் பிதாவினால் கொடுக்கப்படவில்லை.

ரகசிகவருகையின் அறிகுறி என்ன ?

ஒண்றுமில்லை.

- சத்தம் மட்டுமே
- பிரதான தூதனுடைய குரல்.
- தேவனின் எக்காள சத்தம்.

பிறகு அவருடன் பிதாவிடத்துக்கு போவோம்.

தேவனின் இந்த வாக்குறுதியை நாம் மீண்டும் ஒருமுறை பற்றிக்கொள்வோம் .

*1 தெசலோனிக்கேயர் 1:10,*

> *அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.*

*ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்காக காத்திருக்கிறோம் ஏனென்றால், அவர் வரவிருக்கும் கோபாக்கினையினின்று நம்மை விடுவித்தார்.*

*ஆமென்.*